நல்லாவில் 1¼ கோடி ரூபாய்க்கான மதிப்பீட்டினை உலகவங்கி உதவியுடன் எடுத்துக்கொள்ளப்படவுள்ள திட்டங்களில் சேர்க்க மாநகராட்சிக்குத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஞாபகப் படுத்தி மிக வேகமாகப் பெறுவதற்குரிய முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுக்கும்.

திருமதி டி. யசோதா: தலைவர் அவர்களே, அடையார் ஆற்றிலே வெள்ளம் ஏற்படுகிறது என்று சொன்னால் மழைக் காலங்களில் செம்பரம்பாக்கம் ஏரி நிரம்புகின்ற காரணத்தாலே ஏரி உடைப்பெடுத்துவிடும். அதனால் மிகப்பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று அதை தவிர்க்கின்ற வகையில் அரசே அதை திறந்துவிடுகின்ற காரணத்தாலே வெள்ளம் அதிகரிக்கின்றது. ஆகவே செம்பரம்பாக்கம் ஏரியிலே அதிகமாக நீர் தேங்குகின்ற போது அதை சேமிப்பதற்கு வேண்டிய சேமிப்பு வங்கியும், அதே நேரத்திலே தடுப்புச் சுவரும் அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்தக் கண்மாயிலே அதிகப்படியான தண்ணீர் நிற்கவேண்டுமென்றால் கரைகளை நாம் உயர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. கரைகளை உயர்த்துகின்ற நேரத்தில், பின்னாலே நீர்ப்பிடிப்பு பகுதிகள் அதிகமாக பாதிக்கப் படும் என்ற உணர்வை அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் வெள்ளம் வருகின்றபோது எந்த அளவிற்குப் பாதகம் இல்லாத சூழ்நிலையை உருவாக்க முடியும் என்பதையும் அதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு விவரமாகச் சொல்லியிருக்கிறோம்.

குடியாத்தம் தாலுக்காவில் மோர்தானா அணைக்கட்டு.

530—(* வினா எண். 9309) திரு. ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுக்காவில் மோர்தானா அணைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1987 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கு மதிப்பீடு சுமார் 1,200 இலட்சத்திற்கு தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களால் தயாரிக்கப்பட்டு, அவருடைய பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு நீரியல் மற்றும் பொருளாதார சாத்தியக் கூறுகள் விரிவாக ஆராயப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தை பரிசீலனை செய்து சாத்தியக் கூறுகள் இருப்பின் திட்ட அறிக்கை தலைமை பொறியாளரால் அனுப்பப்படும். இவ்வறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் அரசு பரிசீலனை செய்யும்.

கந்தர்வகோட்டை ஒன்றியம் அரயம்பட்டியிலிருந்து காட்டுநாவல் வரை வெள்ளத் தடுப்புச்சுவர்.

531—(*வினா எண். 10135) **திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை ஒன்றியம் அரயம்பட்டியிலிருந்து காட்டுநாவல் வரை வெள்ள தடுப்புச் சுவர் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின்கீழ் கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அரயம்பட்டி கிராமத்திற்கருகே தாலைவாரி குறுக்கே அணை கட்டும் திட்டத்தில் சுமார் 700 மீட்டர் நீளத்திற்கு வெள்ளத் தடுப்புக் கரை அமைக்கும் பணி உள்ளது. இந்தப்பணி தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டு உள்ளது. வழக்கின் தீர்ப்பு அரசுக்கு சாதகமாக வழங்கிய பின் பணிகள் ஆரம்பித்து முடிக்கப்படும்.

திரு. ஜே. முகம்மது கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த திட்டம் எப்போது செயலாக்கப்படும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்றும்